தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

# முற்றம்

ஊரக வளர்ச்சி
மற்றும் ஊராட்சித் துறை
விலை ரூ. 20/-
மலர் 24
இதழ் 10
பிப்ரவரி 2023

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்





# குடியரசு நாள்
# விழாக் கொண்டாட்டம்

# குடியரசு நாள்
## விழாக் கொண்டாட்டம்



















திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

அன்புள்ள சகோதரிகளே,

தரணி போற்றும் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நன்னாளை மகளிர் சுய உதவிக்குழுவினர் அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடி மகிழ்ந்திருப்பீர்கள்.

மகளிர் மேம்பாட்டிற்காக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை செயல்படுத்துவதில் நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வருகிறது. இதன் காரணமாக தமிழ்நாட்டின் கடைக்கோடி கிராமத்தில் வசிக்கும் பெண்கள் கூட இன்று பொருளாதாரத் தன்னிறைவைப் பெற்று, வளமாக வாழ்ந்து வருகின்றனர் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சியில் அதீத கவனம் செலுத்தி வருகிறார். சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு, கடன் தள்ளுபடி, இளைஞர்களுக்கு திறன் பயிற்சிகள் வழங்கி வேலைவாய்ப்புகள் பெற்றுத் தருதல், சுயதொழில் புரிய வழிவகை செய்து தருதல், வேளாண்மையில் ஈடுபடும் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்களுக்கு நவீன விவசாய கருவிகளை வாடகைக்குத் தரும் மையங்கள் அமைத்தல், சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்திட சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல், சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் மணிமேகலை விருது வழங்குதல் போன்ற ஆக்கப்பூர்வமான திட்டங்கள் அனைத்தும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் மேல் கொண்டுள்ள அக்கறையின் வெளிப்பாடுதான்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு அனுப்பியுள்ள 2023ஆம் ஆண்டு புத்தாண்டு – பொங்கல் வாழ்த்து மடலில் குறிப்பிட்டுள்ளபடி, 'மகளிரின் மகிழ்ச்சி தான் நமது செயலாக்கத்திற்கான உண்மையான அளவுகோல்! மகளிர் மகிழ்ச்சி அடைந்தால் – அவர்களது மனது நிறைந்தால் போதும் நாம் சரியான பாதையில் பயணிக்கிறோம் என்பதற்கு அதுவே நற்சான்று' என்பதை நினைவுபடுத்தி, உங்களின் செயல்பாடுகளினால் நீங்கள் மேலும் வளர்ச்சி பெற்றிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களும் சுயஉதவிக் குழுக்களின் வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். மகளிர் சுயஉதவிக் குழுக்களின் வளர்ச்சிக்காக மேலும் பல பயனுள்ள திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன. எனவே, சுயஉதவிக் குழுக்கள் மேலும் ஊக்கத்துடன் செயல்பட்டு, அரசின் திட்டங்களைப் பயன்படுத்தி வெற்றி பெற வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி. வணக்கம்

மீண்டும் சந்திப்போம்...

அன்புடன்,

(மேலாண்மை இயக்குநர்)



திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,

## அன்புள்ள சுய உதவிக்குழு சகோதரிகளே,

உங்கள் அனைவருக்கும் என் இனிய வணக்கம்.

‘தை பிறந்தால் வழி பிறக்கும்’எனும் முதுமொழிக்கேற்ப சுய உதவிக் குழுக்களின் மேம்பாட்டில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள நம் அரசு, பல்வேறு ஆக்கப்பூர்வமான செயல்களை நடைமுறைப்படுத்துவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

அனைத்துத் துறைகளிலும் தங்களின் முத்திரையைப் பதித்து வரும் பெண்கள், இன்று சுய உதவிக் குழுவில் இணைந்து மேலும் பல சாதனைகளைப் படைத்து வருகின்றனர் என்பது நமக்கு பெருமையளிக்கும் செயலாகும். அந்த வகையில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை சந்தைப்படுத்துவதை மேலும் எளிதாக்கும் வகையில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் ‘தன்னை சந்திக்க வருபவர்கள் தனக்கு அன்புப் பரிசாக சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை மட்டும் வழங்க வேண்டும்’ என்று வேண்டுகோள் விடுத்திருப்பது, சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் தரத்திற்கு ஒரு சான்றாகும். இதன் வாயிலாக மாநிலம் முழுவதும் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை சந்தைப்படுத்துவது எளிதாகும் என்பது அனைவரும் அறிந்த ஒன்று.

தமிழ்நாடு ஊரக/நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் ‘பஞ்சசூத்திரத்தின்‘ அடிப்படையில் தங்களின் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருவது பாராட்டத் தகுந்தது. முறையாகக் கூட்டம் நடத்தி, தவறாமல் சேமிப்பு செய்து, உள்கடன் சுழற்சி பிறழாமல் வழங்குவது, வாங்கிய கடனை தவணை தவறாமல் திருப்பி செலுத்துவது மற்றும் குழுவின் கணக்குப்பதிவேடுகளை முறையாகப் பயன்படுத்தல் போன்ற பணிகளை சிறப்புற செயல்படுத்தும் அதே நேரத்தில், சிறு மற்றும் குறு தொழில்களைத் துவங்கி, அவற்றையும் சிறப்பாக நடத்தி வருகிறீர்கள் என்பதை அறிந்து நான் மகிழ்கிறேன்.

இவ்வாறு, சிறப்புற செயல்பட்டு வரும் நம்முடைய செயல்பாடுகள் மேலும் வளர்ச்சியும், வளமும் பெற வேண்டுமெனில் தற்காலத்திற்கு ஏற்ற வகையில் புதுமையைப் புகுத்துதல் மற்றும் இணையவழியில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்தல் போன்ற நடவடிக்கைகள் தற்போது நமது தமிழ்நாடு ஊரக/நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, சுய உதவிக்குழுக்களைச் சார்ந்த எனதருமை சகோதரிகளாகிய நீங்கள், ஏற்கனவே பொருட்களை உற்பத்தி செய்து வந்தாலும் அல்லது புதியதாக தொழில் துவங்கும் எண்ணம் இருந்தாலும் மேற்சொன்ன புதுமை மற்றும் இணையவழி விற்பனைக்கு ஏற்றார்போல் தங்கள் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை தரமானதாக தயாரித்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும், இது குறித்த விபரங்களைப் பெற தமிழ்நாடு ஊரக/நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்க மேலாளர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்களை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

என் அன்பு தோழிகளான நீங்கள், எடுத்திடும் அனைத்து முயற்சிகளிலும் வெற்றியினை மட்டுமே பெற்று வருகிறீர்கள். இனிவரும் காலங்களில் இவ்வெற்றி பெரும் வெற்றியாக மாறும் வகையில் உங்களின் செயல்பாடுகள் அமைய வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

வாழ்த்துகளுடன்,

அன்புடன்,

(பா. பிரியங்கா பங்கஜம்)

கவிதை, உடல் நல குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவி குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவி குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் :
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

## குறளும் – பொருளும்

**நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று**
**பண்பின் தலைப்பிரியாச் சொல்**

நன்மையான பயனைத் தரக்கூடிய நல்ல பண்பிலிருந்து விலகாத சொற்கள் அவற்றைக் கூறுவோருக்கும் இன்பத்தையும், நன்மையையும் உண்டாக்கக் கூடியவைகளாகும்.

tncdwH
Tncdw State
www.Tncdw.org
Tncdwofficial

"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்களை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர், இன்ஸ்டாகிராம் மற்றும் முகநூல் பக்கங்களை பின்தொடருங்கள்.."

# உள்ளே...


| | |
|---|---|
| மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் மாளிகையில் குடியரசு தின விழா | 07 |
| சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா | 09 |
| அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் சமத்துவப் பொங்கல் கொண்டாட்டம் | 16 |
| மகளிர் சுய உதவிக் குழுக்களின் சமத்துவப் பொங்கல் கொண்டாட்டம் | 17 |
| கேழ்வரகு காய்கறி உப்புமா | 26 |
| வெள்ளிவிழா ஆண்டில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் | 29 |


சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர், முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

# முற்றம்

விலை ரூ. 20/- மலர் 24 இதழ் 10
பிப்ரவரி 2023

கௌரவ ஆசிரியர்கள்
திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
தலைமை செயல் அலுவலர்,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

திருமதி. **எம். அருணா,** இ.ஆ.ப.,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
**எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு
திருமதி. **க. முத்துமீனாள்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திருமதி. **எஸ். கவிதா,** கூடுதல்இயக்குநர், TNCDW
**நா. அருள்ஜோதி அரசன்,** கூடுதல்இயக்குநர், VKP
**பி. மருதாசலம்,** கூடுதல் இயக்குநர், TNCDW
**ஆர். சங்கர்,**கூடுதல் இயக்குநர், TNCDW
**வி. பிச்சை,** கூடுதல் இயக்குநர், NULM

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
நிர்வாக ஆசிரியர்
திருமதி. **ரா. ஜீவா,** பொது மேலாளர்,

நிதி நிர்வாகம்
திருமதி. **சு. இராமலெட்சுமி,** நிதி ஆலோசகர்,

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்
**வா. ராகுலன்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு : **பி.ஆர்.இ குழுமம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
**'முற்றம்',**
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

## வெள்ளி விழா காணும் முற்றம்

**அன்புள்ள வாசகர்களுக்கு,**

முற்றம் மாத இதழ் ஆரம்பிக்கப்பட்டு இந்த மாதத்தோடு 24 ஆண்டுகள் நிறைவடைந்து 25-வது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த 24 ஆண்டுகளாக மகளிர் குழுக்களுக்காக வெளியிடப்பட்டு வரும் முற்றம் மாத இதழின் வெளியீட்டாளராகவும், ஆசிரியராகவும் பணியாற்றியதற்கு பெருமையடைகின்றேன். இந்த அரிய வாய்ப்பினை அளித்த தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கும், இந்த இதழ் தவறாமல் வெளிவர ஒத்துழைப்பை வழங்கிய அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் மகளிர் திட்டம் என்ற திட்டத்தினை தொடங்கி, வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களில் உள்ள பெண்களைக் குழுக்களாக உருவாக்கி, ஆற்றல் மிக்கவர்களாக மாற்றுவதற்கு வழிவகை செய்தார். தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் 10 இலட்சம் சுய உதவிக் குழுக்கள் உருவாக்குவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் துரிதமாக அனைத்து ஊராட்சிகளிலும் சுய உதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டன. குழுக்கள் ஒற்றுமையுடனும், முறையாகவும் இயங்குவதற்கு திறன் வளர்ப்பு பயிற்சிகள் கொடுக்கப்பட்டன.

குழு உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வையும், உற்சாகத்தையும் ஏற்படுத்தும் நோக்கிலும், பெண்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்கள் மற்றும் சட்டங்கள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதற்கும், பெண்களின் பல்வேறு சாதனைகளையும் திறமைகளையும் பகிர்ந்து கொள்வதற்கும் முற்றம் மாத இதழ் ஆரம்பிக்கப்பட்டது. 1998-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களால், அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் வாழ்த்துகளுடன் முற்றம் இதழ் வெளியிடப்பட்டது.

அன்று முதல் முற்றம் இதழானது கொள்கை மாறாமல், பெண்களின் வளர்ச்சியை மட்டுமே மையமாகக் கொண்டு, எவ்வித விளம்பரமும் இன்றி தமிழ்நாட்டின் கடைக்கோடி கிராமத்தில் உள்ள சுயஉதவிக் குழுவினையும் சென்றடைந்து இலட்சக்கணக்கான பெண்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டுகிறது.

இந்த 25-ம் ஆண்டு முற்றம் இதழிற்கு வெள்ளி விழா ஆண்டாக இருப்பதால் அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களும் முற்றம் இதழின் வளர்ச்சிக்கு அதிக பங்களிப்பை வழங்கினால் மிகவும் சிறப்பாக இருக்கும்.

இப்படிக்கு,
(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்



# மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் மாளிகையில்

# குடியரசு தின விழா




தமிழ்நாடு ஆளுநர் மாளிகையில் 26.01.2023 அன்று நடைபெற்ற குடியரசு தின விழா நிகழ்ச்சியில், கொடிநாள் தினத்தில் அதிகப் பணம் பெற்றுக் கொடுத்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி ஆணையாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்கள் கேடயங்கள் வழங்கி சிறப்பித்தார். இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு ஆளுநரின் துணைவியார் திருமதி. லட்சுமி ரவி அவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பில் தமிழ்நாட்டின் அலங்கார ஊர்தி

புது டெல்லியில் 26.01.2023 அன்று நடைபெற்ற குடியரசு தின விழா நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசின் சார்பில் பெண்களின் முன்னேற்றம் கலாச்சாரத்தை எடுத்துரைக்கும் வகையில் பங்கேற்ற அலங்கார ஊர்தி.



# சமத்துவப் பொங்கல் விழா

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, 15.01.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், சென்னை, கொண்டித்தோப்பு காவலர்கள் குடியிருப்பில், காவலர்கள் குடும்பத்தினருடன் பொங்கல் விழாவினை கொண்டாடினார். உடன் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ.சைலேந்திரபாபு, இ.கா.ப., சென்னை பெருநகர காவல் ஆணையர் திரு. சங்கர் ஜிவால், இ.கா.ப., சட்டமன்ற உறுப்பினர் திரு. இரா.மூர்த்தி ஆகியோர் உள்ளனர்.



தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, 15.01.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், சென்னை, கொண்டித்தோப்பு காவலர்கள் குடியிருப்பில், காவலர்கள் குடும்பத்தினருடன் பொங்கல் விழாவினை கொண்டாடி, அவர்களுடன் குழுப் புகைப்படம் எடுத்துக் கொண்டார். உடன் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ.சைலேந்திரபாபு, இ.கா.ப., சென்னை பெருநகர காவல் ஆணையர் திரு. சங்கர் ஜிவால், இ.கா.ப.,சட்டமன்ற உறுப்பினர் திரு. இரா.மூர்த்தி ஆகியோர் உள்ளனர்.








# சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், 13.01.2023 அன்று சென்னை, தீவுத் திடலில், தமிழ் மண்ணின் கலைகளை களிப்போடு கொண்டாடும் வகையில் சென்னை மாநகரில் 40 வகையான கலைகளுடன் கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் நடத்தப்படும் சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா-வை தொடங்கி வைத்து, நிகழ்ச்சியில் பங்கேற்ற கலைஞர்களை பாராட்டி நினைவுப் பரிசுகளை வழங்கினார். இந்த விழாவில், மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. கீதா ஜீவன், மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் திரு. ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கா.ராமச்சந்திரன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி கனிமொழி, திரு. ஆர்.கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.நா.எழிலன், திருமதி. ஆ.தமிழரசி, துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர் திரு. வாகை சந்திரசேகர், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இ.ஆ.ப., சுற்றுலாத்துறை இயக்குநர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் திரு எஸ்.ஆர்.காந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அய்யன் திருவள்ளுவர் திருநாள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், 16.01.2023 அன்று அய்யன் திருவள்ளுவர் திருநாளை முன்னிட்டு, சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் அமைந்துள்ள அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலைக்கு மலர்த்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.நா.எழிலன், திரு. த. வேலு, தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.





# ஒரிசா மாநிலத்தில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்ட செயல்பாடுகளை பார்வையிடல்

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒரிசா மாநிலம், புவனேஷ்வரில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்ட செயல்பாடுகளை 19.01.2023 அன்று பார்வையிட்டு, திட்ட செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார். குறிப்பாக ஒரிசா மாநிலத்தில் இளைஞர்களின் திறனை மேம்படுத்த ஏதுவாக உருவாக்கப்பட்ட உலக தரம் வாய்ந்த திறன் வளர்ப்பு பயிற்சி மையத்தை பார்வையிட்டு, இளைஞர்களை தேர்வு செய்தல், திறன் வளர்ப்பு பயிற்சிகள் வழங்குதல், பல்வேறு நாடுகளில் இளைஞர்களை பணியமர்த்துதல் போன்ற செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.

மேலும் ஒரிசா மாநிலத்தில் மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த செயல்படுத்தப்படும் மிஷன் சக்தி (Mission Sakthi) என்ற திட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும், இத்திட்டம் எவ்வாறு மாபெரும் இயக்கமாக உருவெடுத்து வருகிறது என்பது குறித்தும் கலந்தாலோசித்தார். மேலும் மிஷன் சக்தி திட்டத்தினை ஒரிசா மாநிலத்தின் அனைத்து துறைகளும் எவ்வாறு இணைந்து செயல்படுத்துகின்றன என்பதினை மிஷன் சக்தி இயக்குநர் திருமதி. சுஜாதா, இ.ஆ.ப., அவர்கள் விளக்கமளித்தார். அப்போது இத்திட்டம் குறித்து அனைத்து அலுவலர்களுடனும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கலந்துரையாடினார்.

இந்த நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் முதன்மை செயலாளர் டாக்டர். அதுல்யா மிஸ்ரா, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மை செயலாளர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் திரு. கே.பி.கார்த்திகேயன், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் திருமதி.எஸ்.கவிதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.



# மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு கடன் தள்ளுபடி சான்றிதழ்கள் வழங்குதல்

மகளிர் சுய உதவிக் குழுவினர் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்திருந்தார். அதனைத் தொடர்ந்து கடன் தள்ளுபடி குறித்த அரசாணையும் வெளியிடப்பட்டது. தற்போது அதனை நிறைவேற்றும் விதமாக தமிழகத்தில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நகரக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு கடன் சங்கங்கள், வேளாண்மை - நபார்டு உள்ளிட்டவை மூலம் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டு வருகிறது.




சென்னை, இராஜா அண்ணாமலை மன்றத்தில், 09.01.2023 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்களும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்களும், மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு கடன் தள்ளுபடி சான்றிதழ்களை வழங்கினார்கள். இந்நிகழ்வின்போது, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு.அ.சண்முகம், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




மதுரை மாவட்டத்தில் 06.01.2023 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் கலந்து கொண்டு, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கடன் தள்ளுபடி ஆணை மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்வில் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை மாநகராட்சி ஆணையர், மாவட்ட வருவாய் அலுவலர், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர், மதுரை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 29.12.2022 அன்று திருச்சிராப்பள்ளி, அண்ணா விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் 2,764 மகளிர் சுயஉதவிக் குழுக்களின் 54,654 பயனாளிகள் பயன்பெறும் வகையில் 78 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு மற்றும் இதர பயன்களை வழங்கினார். மேலும், 33 சமுதாய அமைப்புகளுக்கு மணிமேகலை விருதுகளையும், 8 வங்கிகளுக்கு வங்கியாளர் விருதுகளையும் வழங்கி சிறப்பித்தார்.




காஞ்சிபுரம் அண்ணா அரங்கத்தில் 29.12.2022 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் 569 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.44.91 கோடி மதிப்பிலான வங்கிக் கடனுதவிகளை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.க.சுந்தர், திரு. சி.வி.எம்.பி.எழிலரசன், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். மா.ஆர்த்தி, இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 806 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ரூ.58 கோடியே 83 இலட்சம் மதிப்பிலான கடனுதவிகளை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர்.காந்தி அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். வி.ஜெயசந்திர பானுரெட்டி, இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஒய்.பிரகாஷ், திரு. டி.மதியழகன், கூடுதல் ஆட்சியர் மற்றும் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. வந்தனாகார்க், இ.ஆ.ப., கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு.பி.ஏ.ஜாகீர் உசேன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்குதல்




சென்னை, ரிப்பன் மாளிகை வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் 29.12.2022 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் 968 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.47.18 கோடி மதிப்பிலும், 3 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.1.60 கோடி மதிப்பிலும் வங்கிக் கடன் உதவிகளை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், முதன்மைச் செயலாளர்/ பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. சீனிவாசன் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டத்தில் 29.12.2022 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் 1407 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 19,966 உறுப்பினர்களுக்கு ரூ.149.24 கோடி மதிப்பிலான வங்கிக் கடன் உதவிகள் மற்றும் நலத் திட்ட உதவிகளை மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. சா.மு.நாசர் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.வி.ஜி.ராஜேந்திரன், திரு. எஸ்.சந்திரன், திரு.க.கணபதி, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். ஆல்பி ஜான் வர்கீஸ், இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி)/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.செ.ஆ.ரிஷப், இ.ஆ.ப., திருவள்ளூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. கோ.மலர்விழி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், வங்கியாளர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# இளைஞர் திறன் திருவிழா

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி (DDU-GKY) திட்டத்தின் சார்பில் 18 வயது முதல் 35 வயது வரை உள்ள படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய தொழில் திறன் பயிற்சி அளிக்கும் நோக்கத்தில் இளைஞர் திறன் திருவிழா அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படுகிறது.



திருவண்ணாமலை மாவட்டத்தில் இளைஞர் திறன் திருவிழா 22.12.2022 அன்று செங்கம் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் செங்கம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் திரு. எம்.பி.கிரி, திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு.பா.அ.ஸையித் சுலைமான், ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி. கு.விஜயராணி குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஆதிதிராவிடர் வீட்டு வசதி நல அலுவலர், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார இயக்க மேலாளர்கள், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் களப்பணியாளர்கள் கலந்து கொண்டனர். இவ்விழாவில் கலந்து கொண்ட 764க்கும் மேற்பட்ட இளைஞர்களில் தொழிற்பயிற்சிக்குத் தேர்வு செய்யப்பட்ட 102 நபர்களுக்கு பயிற்சியில் சேர்வதற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.




நாகப்பட்டினம் மாவட்டம், கீழையூர் சமுதாய கூடத்தில் 24.12.2022 அன்று இளைஞர் திறன் திருவிழா நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு. அ.அருண் தம்புராஜ், இ.ஆ.ப., அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இவ்விழாவில் கலந்து கொண்ட 412 இளைஞர்களில் திறன் மேம்பாட்டு பயிற்சிக்குத் தேர்வு செய்யப்பட்ட 135 இளைஞர்களுக்கு பயிற்சியில் சேர்வதற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், உதவித் திட்ட அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், வட்டார இயக்க மேலாளர்கள், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் களப்பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஊரக / நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் சார்பில், தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டத்தின் கீழ் கிருஷ்ணகிரி வட்டார அளவிலான இளைஞர் திறன் திருவிழா 07.01.2023 அன்று கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதில் 528 இளைஞர்களும், 15 பயிற்சி நிறுவனங்களும் கலந்து கொண்டனர். பல்வேறு தொழிற் பயிற்சிகளுக்காக 175 நபர்கள் தேர்வு செய்யப்பட்டனர். தேர்வு செய்யப்பட்ட இளைஞர்களுக்கு கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சான்றிதழ்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் புத்தாண்டு – பொங்கல் விற்பனைக் கண்காட்சி நிறைவு விழா






தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் புத்தாண்டு மற்றும் பொங்கல் விற்பனைக் கண்காட்சியினை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 30.12.2022 அன்று சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் துவக்கி வைத்தார்.

30.12.2022 முதல் 12.01.2023 வரை நடைபெற்ற இக்கண்காட்சிக்கு ஏராளமான மக்கள் வருகை தந்து, சுய உதவிக் குழுக்கள் விற்பனை செய்த தரமான பொருட்களை பெருமளவில் வாங்கிச் சென்றனர். இக்கண்காட்சியில் ரூ.21,76,376/- அளவிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சிறப்புமிகு கண்காட்சியின் நிறைவு விழா 11.01.2023 அன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், அதிக அளவில் விற்பனை செய்த டிசம்பர் மகளிர் சுய உதவிக் குழு, தென்காசி BBRC மற்றும் பவளக்கொடி மரகதம் மகளிர் சுய உதவிக் குழு ஆகியவற்றுக்கு முறையே முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களும், பிற அரங்குகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்களையும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள் திருமதி. எஸ்.கவிதா, திரு.வி.பிச்சை, பொது மேலாளர் திருமதி. ரா.ஜீவா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் சமத்துவப் பொங்கல் கொண்டாட்டம்





சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் 12.01.2023 அன்று சமத்துவப் பொங்கல் விழா தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி.ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள், செயல் இயக்குநர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் தலைமையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர், இணை இயக்குநர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில் குடியரசு தினக் கொண்டாட்டம்

சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் 26.01.2023 அன்று குடியரசு தின விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர், இணை இயக்குநர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.





# மகளிர் சுய உதவிக் குழுக்களின்
# சமத்துவப் பொங்கல் கொண்டாட்டம்

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் சமத்துவப் பொங்கலை மகிழ்ச்சியுடன் கொண்டாடி மகிழ்ந்தனர். தைப்பொங்கல் நன்னாளை முன்னிட்டு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 2023 புத்தாண்டு - பொங்கல் வாழ்த்து செய்திகள் அடங்கிய வாழ்த்து மடல்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


அரியலூர்


செங்கல்பட்டு


கோயம்புத்தூர்


கடலூர்


திண்டுக்கல்


ஈரோடு


கள்ளக்குறிச்சி


காஞ்சிபுரம்

# மகளிர் சுய உதவிக் குழுக்களின்
# சமத்துவப் பொங்கல் கொண்டாட்டம்



கிருஷ்ணகிரி




மதுரை



மயிலாடுதுறை



நாகப்பட்டினம்



நாமக்கல்



புதுக்கோட்டை



ராணிப்பேட்டை



சிவகங்கை

# மகளிர் சுய உதவிக் குழுக்களின்
# சமத்துவப் பொங்கல் கொண்டாட்டம்



திருவள்ளூர்



தென்காசி



தூத்துக்குடி



திருவண்ணாமலை



திருவாரூர்




திருநெல்வேலி



திருப்பத்தூர்



திருப்பூர்

# மகளிர் சுய உதவிக் குழுக்களின்
# சமத்துவப் பொங்கல் கொண்டாட்டம்


கன்னியாகுமரி


கரூர்


சேலம்


பெரம்பலூர்


நீலகிரி


வேலூர்


விழுப்புரம்


விருதுநகர்

# தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வெற்றிக் கதைகள்

## திருவாரூர் மாவட்டம்

# தொழில் முனைவோராக்கிய வாழ்வாதார இயக்கம்

சுயமாக தொழில் செய்ய தயங்கின நான் என்னுடைய பாரம்பரியத் தொழிலான மரச் செக்கு எண்ணெய் தொழில் செய்ய ஆரம்பிச்சிட்டேன் என உற்சாகம் பொங்க கூறுகிறார், திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டாரம், வேளூர் ஊராட்சியில் வசிக்கும் ஷோபனா. 'என்னுடைய குடும்பத்தில் நான் கடைசி பிள்ளை என்பதால் எனக்கு செல்லம் அதிகம். எங்க அப்பா அரசாங்கத்துல வேலை பார்த்ததனால என்னால பி.ஏ., வரை படிக்க முடிந்தது. ஆனால் வேலைக்கு போகணுங்கிற எண்ணம் தோணல. அதனால எனக்கு திருமணம் செய்து வைத்து விட்டனர். என் கணவர் போட்டோ ஸ்டுடியோ நடத்தி வந்தார். அவருடைய வருமானத்துல குடும்பத்தை சிரமமில்லாம நடத்த முடிஞ்சது. இந்த சமயத்துல கொரோனா வந்ததால, என் கணவரின் வருமானம் குறைந்தது. இதனால குடும்பம் நடத்துவது சிரமமாக இருந்தது.

இந்த நிலையில் வீட்டிலிருந்தபடியே ஏதாவது தொழில் செய்யலாமா? என்று என் கணவரிடம் கேட்டேன். உடனே என் கணவர் என்ன தொழில் செய்யப் போகிறாய்? என்று கேட்டார். உடனே நான், நமது பாரம்பரிய தொழிலான மர செக்கு எண்ணெய் தயாரிக்கும் தொழிலை செய்யலாம் என்று சொன்னேன். இதைக் கேட்டதும் என் கணவர் மகிழ்ச்சியுடன் சரி என்று சொல்லி விட்டார். நான் மகளிர் சுய உதவிக் குழுவில் இருப்பதால் எனக்கு சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்களுடன் பழக்கம் உண்டு.

எனது கணவரின் உதவியுடன் மரச் செக்கு இயந்திரம் மற்றும் மூலப் பொருட்களை வாங்கி எண்ணெய் எடுத்து விற்பனை செய்ய ஆரம்பித்தேன். தரமான எண்ணெயாக இருப்பதால் நான் உற்பத்தி செய்யும் எண்ணெயை அனைவரும் வாங்க ஆரம்பித்தனர். இதனால எனக்கு நல்ல வருமானம் கிடைக்க ஆரம்பித்தது. எனது குடும்பத்தின் வறுமையும் குறைய ஆரம்பித்தது.

தொழில் நன்றாக நடந்ததால் கூடுதலாக ஒரு இயந்திரம் வாங்கி மேலும் தொழிலை விரிவுபடுத்தலாம் என்று முடிவு செய்தேன். திருவாரூர் மாவட்ட மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலில் எனக்கு மானியத்துடன் கூடிய கடனாக 2 இலட்சம் ரூபாய் கிடைத்தது. அதைக் கொண்டு எனது தொழிலை விரிவுபடுத்தினேன். நான் தயாரிக்கும் எண்ணெயை டெல்டா விவசாயி என்ற பெயரில் விற்பனை செய்ய ஆரம்பித்தேன். அதன் மூலம் எனக்கு மாதம் ரூ.15,000/- வரை வருமானம் கிடைக்கத் தொடங்கியது.

இந்த சமயத்தில் எனது வாடிக்கையாளர்கள், மாவு அரைத்து விற்பனை செய்தால் நன்றாக இருக்கும் என்று சொன்னார்கள். நானும் அதற்கான இயந்திரங்கள் மற்றும் மூலப் பொருட்கள் வாங்க மீண்டும் மகளிர் திட்டம் மூலம் கடன் வாங்கி, தற்போது மாவு அரைத்து விற்பனை செய்து அதன் மூலமும் வருவாய் பெற்று வருகிறேன்.

சாதாரண பெண்ணாக இருந்த என்னை இன்று தொழில் முனைவோராக்கிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று திருமதி. ஷோபனா மகிழ்ச்சிப் பொங்க கூறுகிறார்.



## திருநெல்வேலி மாவட்டம்

# வாழ்வில் வளம் தந்த வாழ்வாதார இயக்கம்

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி வட்டாரம், மைலப்புரம் ஊராட்சியில் வசித்து வரும் என் பெயர் டெய்சிராணி, (க/பெ. ஜான்சன் ரிச்சர்டு) நான்கு ஆண்டுகளுக்கு முன்பு வரை எனது குடும்ப சூழல் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது. அந்த காலகட்டத்தில்தான் முதல் முறையாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் பற்றியும் மகளிர் சுய உதவிக் குழு பற்றியும், அதன் பயன்கள் குறித்தும் நன்கு அறிந்து கொண்டேன். பிறகு எங்கள் பகுதியில் செயல்பட்டு வந்த அன்னை மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக சேர்ந்து தற்போது ஊக்குனராக உள்ளேன். நான் எனது குழுவின் மூலம் கடந்த வருடம் சமுதாய முதலீட்டு நிதியில் ரூ.73,000/- தொழில் கடனாக பெற்று சிறிய அளவில் காய்கறி கடை ஒன்றை தொடங்கினேன். அதில் தினந்தோறும் வருமானம் கிடைத்து வருகிறது. எனது வாழ்வாதாரமும் வளம் பெற்றுள்ளது. எனக்கு சமுதாய முதலீட்டு நிதி மற்றும் வங்கி கடன் வழங்கி எனது வாழ்வாதாரத்தை மேம்படுத்த, ஊக்கத்தை தந்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு என் உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



- டெய்சிராணி

## தூத்துக்குடி மாவட்டம்

# உயர்ந்து வரும் வாழ்க்கைத் தரம்



- வேலம்மாள்

எனது பெயர் வேலம்மாள், நான் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டாரம், பிச்சிவிளை ஊராட்சியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். ஏழ்மை நிலையில் இருக்கும் எனக்கு 2 குழந்தைகள் உள்ளனர். எனது குடும்பத்தை நடத்த போதிய வருமானம் கிடைக்கவில்லை. இந்நிலையில் எனது ஊராட்சியின் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மூலம் எங்கள் பகுதியில் செயல்படும் ஆனந்த விநாயகர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக சேர்ந்தேன். புதிதாக தொழில் தொடங்க வேண்டும் என்பதற்காக எனது குழுவில் ரூ.25,000/- கடன் பெற்று தையல் மெஷின் வாங்கி ஆயத்த ஆடைகள் தைத்து கொடுத்து வந்தேன்.

பின்னர் குலசை மற்றும் முத்தாரம்மன் கோவில்களில் சாமி சிலைகளுக்கு சின்ன சின்ன ஆடைகள் தைத்து கொடுக்க ஆரம்பித்தேன். நான் தைக்கும் ஆடைகள் நன்றாக இருந்ததால் மீண்டும் மீண்டும் எங்களிடம் தைத்து கொடுக்குமாறு கேட்டனர். இந்நிலையில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் திருச்செந்தூர் வட்டார வணிக வள மைய அமைப்பிலிருந்து ரூ.50,000/- கடன் பெற்று கிரீடம், ஆடைகள், அலங்காரப் பொருட்கள், பொம்மைகள், பாசிப் பொருட்கள், கண் மலர் போன்ற பொருட்களை வாங்கி விற்பனை செய்ததுடன், ஆடைகளையும் தைத்து கொடுத்தேன். எங்கள் ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் நான் தைத்து கொடுக்கும் ஆடைகள் விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. இதன் மூலம் எனது தொழில் முன்னேற்றம் அடைந்து, வருமானமும் பெருகி, மாதம் ரூ.9,000/- வரை வருவாய் கிடைக்கிறது. இது எனது குழந்தைகளின் படிப்பிற்கும், எனது குடும்பத்தின் வறுமையைப் போக்குவதற்கும் மிகவும் உதவியாக இருக்கிறது.

இந்த அளவுக்கு நாங்கள் முன்னேற்றம் அடைய உதவி செய்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும் மிக்க நன்றி.

## சிவகங்கை மாவட்டம்

# கால்மிதியடி தயாரித்தல் வாழ்வாதார தொழில் குழு



சிவகங்கை மாவட்டத்தில், கண்டனூர், கதர் வளாகம், அரண்மனை சிறுவயல், காஞ்சிரங்கால் மற்றும் தேவகோட்டை ஆகிய ஊராட்சிகளில் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் இணைந்து கால் மிதியடி தயார் செய்யும் தொழில் செய்து வருகின்றனர். திருப்பூர், மதுரை போன்ற இடங்களிலிருந்து கழிவு பனியன் துணிகளை மூலப் பொருளாக கொள்முதல் செய்து, தறிகள் மூலம் கால் மிதியடிகள் தயார் செய்து உள்ளூர் சந்தைகள் மற்றும் வியாபாரிகளிடம் விற்பனை செய்து வருமானம் ஈட்டி வருகின்றனர். இந்த தொழில் மூலம் ஒவ்வொரு உறுப்பினரும் நாள் ஒன்றுக்கு ரூ.250/- முதல் ரூ.400/- வரை வருமானம் பெற்று வருகின்றனர்.

## கிருஷ்ணகிரி மாவட்டம்

# ஸ்ரீ அஞ்சலி மகளிர் குழுவின் வெற்றி



கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி ஒன்றியம், குருபரப்பள்ளி ஊராட்சிக்கு சிக்காரிபுரம் கிராமத்தில் செயல்படும் ஸ்ரீ அஞ்சலி மகளிர் குழுவினரின் வெற்றிக் கதையை கேட்போம் வாருங்கள். சிக்காரிபுரம் கிராமத்தில் நரிக்குறவர்கள் இனத்தைத் சார்ந்த சுமார் 140 குடும்பங்கள் வசித்து வருகின்றோம். எந்தவித நிலையான தொழிலும் இல்லாததால் வாழ்வாதாரமும் எங்கள் பிள்ளைகளின் எதிர்காலமும் கேள்விக்குறியாக இருந்தது. தினமும் குடும்பம் நடத்துவதற்கு மிகவும் சிரமமாக இருந்தது. இந்நிலையில் எங்கள் பகுதியில் செயல்படும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின்படி ஸ்ரீ அஞ்சலி மகளிர் சுய உதவிக் குழுவினை ஆரம்பித்தோம்.

எங்கள் குழு உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ளும் வகையில் தொழில் திட்டம் தயாரித்து மாநில சமவளர்ச்சி நிதியாக கிடைத்த ரூ. 10,00,000/-த்தை குழுவின் உறுப்பினர்களுக்குப் பிரித்து கொடுக்கப்பட்டது. அந்தப் பணத்தை மூலதனமாக கொண்டு, மணிமாலைகள், வளையல்கள், அழகுப்பொருட்கள் போன்றவற்றை உற்பத்தி செய்து, உள்ளூர், கிருஷ்ணகிரி, வேப்பனப்பள்ளி மற்றும் ஓசூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில் விற்பனை செய்து வருகின்றனர். மேலும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் நடைபெறும் விற்பனைக் கண்காட்சிகள் மற்றும் கல்லூரி சந்தைகள், ஓசூர் மற்றும் பெங்களூர் பகுதிகளில் மொத்த வியாபாரம் மற்றும் சில்லரை வியாபாரம் செய்து வருகின்றோம்.

குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் நாளொன்றுக்கு ரூ.850/- வரை சராசரியாக விற்பனை செய்து வருவதன் மூலம், இதர செலவுகள் போக மாதம் ரூ. 8,000/- முதல் ரூ 11,500/- வரை இலாபம் பெற்று வருகின்றோம். எங்களுக்கு இந்த வாய்ப்பை அளித்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்” என்று ஸ்ரீ அஞ்சலி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர்.

சுய உதவிக் குழுக்களின்
செயல்பாடுகளை அறிந்திட
**முற்றம் படியுங்கள்!**

முற்றம் மேலும் மேலும்
வளர்ந்திட உங்களின்
**ஆதரவை**
**தாருங்கள்!**






முற்றத்திற்கு சந்தா
**செலுத்திடுங்கள்!**

புத்தகத்தைப் படிக்க என்னை
**Scan செய்யவும்**

| முற்றம் இதழின் சந்தா விபரம் | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 240/- |
| இரண்டு ஆண்டு | ரூ. 450/- |
| மூன்று ஆண்டு | ரூ. 680/- |

| விளம்பரக் கட்டணம் | |
|---|---|
| அட்டையின் 2-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் 3-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் பின்பக்கம் | ரூ. 50,000/- |
| புத்தகத்தின் உள்பக்கம் | ரூ. 35,000/- |

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

**வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும்.**

**விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி**


**முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,**
அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

# வணிகம் வளர்க...
# மகளிர் சுய உதவிக் குழுக்களின்
# தரமான தயாரிப்புப் பொருட்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், தரமான பொருட்கள் பலவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்களை அனைவரும் அறிந்து கொள்ளவும், அவற்றிற்கான சந்தை வாய்ப்புகளை அதிகரித்திடவும் மாதந்தோறும் முற்றம் இதழில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் குறித்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர் மாவட்டம்

| சுய உதவிக் குழுவின் பெயர் | தயாரிப்புப் பொருளின் பெயர் | |
|---|---|---|
| திருமதி. ரேணுகா,<br>அன்னை தெரசா மகளிர் சுய உதவிக் குழு,<br>பட்டணம் ஊராட்சி, சூலூர் வட்டாரம்,<br>கோயம்புத்தூர் மாவட்டம்.<br>கைபேசி - 98946 23857 | மூலிகை சோப்புகள் |  |
| திருமதி. சாந்தி,<br>சிந்து நதி மகளிர் சுய உதவிக் குழு,<br>நல்லாட்டிப்பாளையம் ஊராட்சி,<br>கிணத்துக்கடவு வட்டாரம்,<br>கோயம்புத்தூர் மாவட்டம்.<br>கைபேசி - 85262 19070 | தேங்காய் நார் கயிறு |  |
| திருமதி. அமலோற்பவ மேரி,<br>ரோஜா மகளிர் சுய உதவிக் குழு,<br>பாப்பம்பட்டி ஊராட்சி,<br>சுல்தான்பேட்டை வட்டாரம்,<br>கோயம்புத்தூர் மாவட்டம்.<br>கைபேசி - 99442 80635 | சணல் பைகள் |  |
| திருமதி. ஷகிலா பானு,<br>அறம் மகளிர் சுய உதவிக் குழு,<br>சின்னாம்பாளையம் ஊராட்சி,<br>பொள்ளச்சி வடக்கு வட்டாரம்,<br>கோயம்புத்தூர் மாவட்டம்.<br>கைபேசி - 75300 80117 | துணிப் பைகள் |  |
| திருமதி. மாரியம்மாள்,<br>புன்னகை மகளிர் சுய உதவிக் குழு,<br>தென் சங்கம்பாளையம் ஊராட்சி,<br>ஆனைமலை வட்டாரம்,<br>கோயம்புத்தூர் மாவட்டம்.<br>கைபேசி - 93448 48886 | பாக்கு மட்டை தட்டுகள் |  |



# கேழ்வரகு காய்கறி உப்புமா

நம் உடலுக்குத் தேவையான சத்துக்களை தருபவை சிறுதானியங்கள். சிறுதானியங்களின் பெருமையை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் 2023ஆம் ஆண்டை சிறுதானியங்கள் ஆண்டாக அறிவித்துள்ளனர். இச்சிறப்புமிகு தானியங்களைக் கொண்டு சமைக்கப்படும் உணவினை சாப்பிடுவதால் அனைத்து நன்மைகளையும் பெறலாம். சுவையும், சத்தும் நிறைந்த கேழ்வரகு காய்கறி உப்புமா தயாரிக்கும் முறை குறித்து இப்பக்கத்தில் காணலாம்.

## தேவையான பொருட்கள்

கேழ்வரகு மாவு - 1 கப், கேரட், பீன்ஸ், உருளைக் கிழங்கு மற்றும் வெங்காயம் ஆகியவை தலா 50 கிராம், மிளகாய் - 4, உப்பு - தேவையான அளவு, கறிவேப்பிலை - சிறிதளவு, தாளிக்க கடுகு, உளுந்தம் பருப்பு, எண்ணெய் போன்றவை தேவையான அளவு.

## செய்முறை

வெங்காயம், பச்சை மிளகாய், கேரட், பீன்ஸ், கொத்தமல்லி, உருளைக்கிழங்கு ஆகியவற்றை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். அடுப்பில் கடாய் வைத்து அதில் எண்ணெய் ஊற்றி கடுகு, உளுத்தம் பருப்பு, கறிவேப்பிலை, பச்சை மிளகாய் போட்டு தாளித்த பின் வெங்காயத்தை போட்டு வதக்கவும்.

வெங்காயம் நன்றாக வதங்கியதும் காய்கறிகளைப் போட்டு சிறிது நேரம் வதக்கிய பின் சிறிது தண்ணீர் ஊற்றி அதில் உப்பு சேர்த்து காய்கறிகளை வேக வைக்கவும். காய்கறிகள் வெந்தவுடன் அதில் கேழ்வரகு மாவை சிறிது சிறிதாக கொட்டி கைவிடாமல் கிளற வேண்டும். தண்ணீர் வற்றி கெட்டியான பதம் வந்ததும் கொத்த மல்லி தழை தூவி இறக்கவும். சத்தான கேழ்வரகு - காய்கறி உப்புமா ரெடி.



## பயனுள்ள வீட்டுக் குறிப்புகள்

- எந்த அரிசியாக இருந்தாலும் 15 நிமிடங்களுக்கு குறையாமல் ஊற வைத்து உலையில் வேக வைத்தால் அது வேகும் நேரம் குறையும். எரிபொருள் மிச்சமாகும்.
- பலகாரம் செய்த பிறகு மீதமாகும் சுட்ட எண்ணெயில் வாழைக்காய், கருணைக்கிழங்கு வறுவல் செய்தால் சுவை மிகுதியாக இருக்கும்.
- விளக்கு போன்ற பித்தளை பாத்திரங்களை புளி சேர்த்து தேய்ப்பதற்கு பதில் எலுமிச்சை சாறை பாத்திரம் தேய்க்கும் பொடியுடன் சேர்த்து தேய்த்தால் எண்ணெய் பிசுக்கள் மறைந்து பளபளப்பாக மாறிவிடும்.
- புத்தக பீரோவில் புகையிலைத் துண்டுகளைப் போட்டு வைத்தால் பூச்சிகள் வராது.
- பட்டுச் சேலைகளைத் துவைக்கும்போது அலசும் நீருடன் சிறிது எலுமிச்சை சாறு கலந்து கொண்டால் சாயம் போகாது; மங்காது. பட்டுச் சேலையும் பளிச்சிடும்.
- பட்டுப் புடவைகள் மடிக்கும் போது ஜரிகையை உள்புறம் வைத்து மடித்தால் ஜரிகை கறுத்துப் போகாமல் பாதுகாக்கலாம்.
- வெள்ளி நகைகள் வைத்திருக்கும் டப்பாவில் சிறிதளவு கற்பூரம் போட்டு வைத்தால் நகைகள் கறுக்காது.

# தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வெற்றிக் கதைகள்

## ஈரோடு மாவட்டம்
## மகிழ்ச்சியும் வளர்ச்சியும் தந்த நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்

ஈரோடு மாவட்டம், சலங்கபாளையம் பேரூராட்சியில் செயல்பட்டுவரும்ஜெயம்மகளிர்சுயஉதவிக்குழுவின் வெற்றி குறித்து அக்குழுவின் உறுப்பினர்கள் கூறும் போது, 'ஏழ்மை நிலையிலிருந்த நாங்கள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் ஜெயம் மகளிர் சுய உதவிக் குழுவினை துவங்கினோம். எங்களுக்கு ஊக்குநர், பிரதிநிதி பயிற்சி மற்றும் குழு உறுப்பினர்கள் பயிற்சி கொடுத்தார்கள். ஊக்க நிதியாக ரூ.10,000/- வழங்கப்பட்டது. நாங்கள் ஆரம்பத்தில் கூலி வேலை செய்து சேமிப்பு செலுத்தியும், எங்களது தேவைக்காக வட்டிக்குகடன் வாங்கி வந்த நிலையில் எங்களது சேமிப்புத் தொகையினை உள்கடனாக எடுத்து பயன்படுத்தி வந்தோம்.

கனரா வங்கி மூலம் முதல் வங்கிக் கடனாக ரூ.1,60,000/-; பெற்று தவணை தவறாமல் செலுத்தியதால் தொடர்ந்து இரண்டாவது வங்கிக் கடனாக ரூ. 3 இலட்சம், மூன்றாவது கடனாக ரூ.5 இலட்சம் என மூன்று முறை வங்கி கடன் பெற்று சிறப்பாக கடன் திருப்பம் செய்தோம். குழுவினை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் பதிவு செய்ததால் எங்களுக்கு வட்டி மானியம் கிடைத்தது.

தற்போது ஏதாவது தொழில் துவங்க வேண்டும் என தீர்மானித்து, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் ரூ.8 இலட்சம் கடன் பெற்று, நாங்கள் 6 நபர்கள் இணைந்து தேங்காய், நிலக்கடலைப் பருப்பு வாங்கி மரச் செக்குபோட்டு எண்ணை ஆட்டி விற்பனை செய்து வருகிறோம். மேலும் நாட்டுச் சர்க்கரை, குளியல் சோப்பு என மகளிர் சுய உதவிக்குழுவினர் தயாரித்து விற்கும் பொருட்களை வாங்கியும் விற்பனை செய்து வருகிறோம். மகளிர் சுய உதவிக் குழு உற்பத்தி பொருட்கள் விற்பனை கண்காட்சியிலும் கலந்து கொள்கிறோம். குழுவில் உள்ள மற்ற உறுப்பினர்கள் கால் நடை வளர்ப்பு, தறி நெய்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டு வருமானம் ஈட்டி வருகின்றனர்.

ஈரோடு மாவட்ட மகளிர் திட்ட இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் அவர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் நாங்கள் செய்யும் தொழிலை மேலும் அபிவிருத்தி செய்யவும், விற்பனை செய்யவும் உரிய ஆலோசனைகளை வழங்கி பெரிதும் ஊக்கப்படுத்தினார்கள். மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி பொருட்களின் விற்பனை கண்காட்சியிலும் கலந்து கொள்கிறோம்.

தற்போது எங்களது பொருளாதாரம் மேலோங்கி உள்ளது. குழுவில் இணைவதற்கு முன்பு பணத் தேவைக்காக சிரமப்பட்ட நாங்கள் தற்போது குழுவின் சேமிப்பிலிருந்து குழந்தைகளின் கல்விச் செலவு, குடும்பத் தினரின் மருத்துவ செலவு மற்றும் சுபநிகழ்ச்சிகள் ஆகிய அனைத்து தேவைகளுக்கும் பயன்படுத்திக் கொள்கிறோம். எங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த வட்டி மானியத்துடன் கடன் பெற்றுத் தந்து எங்களது தேவை போக மற்றவர்களுக்கு உதவி புரியும் வகையில் எங்களது வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்திய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று ஜெயம் மகளிர் சுய உதவிக்குழுவின் உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர்.



# புதுக்கோட்டை மாவட்டம்
# வட்டி மானியம் வெற்றிக் கதை

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி பேரூராட்சி, போகிதெருவில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் இரட்டை ரோஜா மகளிர் சுய உதவிக்குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவிற்கு வழங்கப்பட்ட சுழல் நிதியினை உறுப்பினர்களுக்கு உள்கடனாக அவர்களின் தேவையின் அடிப்படையில் வழங்கப்பட்டது. உள்கடன் முறையாக திரும்ப செலுத்தப்பட்டு சேமிப்பு, உள்கடன் மற்றும் வட்டி மூலம் பெறப்பட்ட தொகையினை மீண்டும் மீண்டும் உள்கடனாக வழங்கப்பட்டது. 2021- ஆம் ஆண்டு முதல் நேரடிக் கடனாக ரூ.1,95,000- பெறப்பட்டு நபர் ஒன்றுக்கு ரூ.15,000/- முதல் ரூ.20,000/- வரை தேவைக்கேற்ப வழங்கப்பட்டது. ஒவ்வொரு மாதமும் தவணை தவறாமல் வங்கிக் கடன் முழுவதுமாக வங்கியில் செலுத்தப்பட்டது. இதன் பயனாக தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 5 சதவீத வட்டி மானியமாக ரூ.8,586/- குழுவின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வழங்கப்பட்டது. இந்தத் திட்டம் மிகவும் பயனுள்ளதாக இருப்பதாக இரட்டை ரோஜா மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.



# கிருஷ்ணகிரி மாவட்டம்
# துளசி மகளிர் மன்றத்தின் வெற்றிப் பயணம்



கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தேர்வுநிலை அம்பேத்கார் தெருவில் வசித்து வருபவர்களில் பெரும்பாலானவர்கள் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தங்களின் வாழ்வாதாரத்திற்காக அப்பகுதியில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தினை அணுகினர். இயக்கத்தின் வழிகாட்டுதலின்படி துளசி மகளிர் குழு ஆரம்பிக்கப்பட்டது.

குழு உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ளும் வகையில் தொழில் திட்டம் தயாரித்து தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலமாக சுழல் நிதியாக ரூ.10,000/- பெற்று, அந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு, சுவையான தின்பண்டமான தட்டு வடைகளை உற்பத்தி செய்து, கிருஷ்ணகிரி, ஓசூர் பகுதிகளில் விற்பனை செய்து வருகின்றனர். மேலும் விற்பனைக் கண்காட்சிகள், கல்லூரி சந்தைகளிலும் விற்பனை செய்து வருகின்றனர். ஓசூர் மற்றும் பெங்களூர் பகுதியிலும் மொத்த வியாபாரம் மற்றும் சில்லரை வியாபாரம் செய்து வருகின்றனர்.

நாளொன்றிற்கு ரூ.850/-வீதம் சராசரியாக குழு உறுப்பினர்கள் விற்பனை செய்கின்றனர் இதர செலவுகள் போக மாதம் ரூ.8000/- முதல் ரூ.11,500/- வரை குழு உறுப்பினர்கள் இலாபம் பெற்று வருகின்றனர். இந்த வாய்ப்பை அளித்த தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு துளசி மகளிர் மன்றத்தின் உறுப்பினர்கள் தங்களின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# திருப்பத்தூர் மாவட்டம்
# வாழ்வில் ஒளியூட்டிய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்



திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி நகராட்சியில் வசிக்கும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள முஸ்லீம் சமூகத்தை சேர்ந்த மகளிரை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் மூலம் ஒருங்கிணைத்து 16 மகளிர் சுய உதவிக்குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பகுதியில் அமைக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களைக் கொண்டு அன்னை தெரசா சென்னாம்பேட்டை பகுதி அளவிலான கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த சுய உதவிக்குழுக்களில் உறுப்பினராக உள்ள பெரும்பாலான மகளிர் வாழ்வாதாரத்திற்காக வீட்டிலிருந்தே துணிகளில் ஜாரி வேலைகளை (Zari Work) செய்து வருகின்றனர். அன்னை தெரசா சென்னாம்பேட்டை பகுதி அளவிலான கூட்டமைப்பில் இணைந்துள்ள சுய உதவிக் குழுக்களில் உள்ள சுமார் 35 உறுப்பினர்களும் Zari Work வாயிலாக வாழ்வாதார வளம் பெற்று வருகின்றனர்.

Zari Work தொழில் செய்வதற்கு தேவையான மூலப்பொருட்களை கொள்முதல் செய்வதற்காக யூனியன் பேங்க் ஆப் இந்தியா - வாணியம்பாடி கிளையில் நேரடிக் கடனாக ரூ.8 இலட்சம் கடனுதவிப் பெற்றுள்ளனர். தேவையான மூலப்பொருட்களை மொத்தமாக பெங்களூர் மற்றும் பர்கூரில் கொள்முதல் செய்து வருகின்றனர்.

இந்த பணியின் மூலம் உறுப்பினர் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றிற்கு சுமார் ரூ. 6,500/- வரை வருமானம் ஈட்டுகின்றனர். தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவிய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு அன்னை தெரசா சென்னாம்பேட்டை பகுதி அளவிலான கூட்டமைப்பில் இணைந்துள்ள சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# வெள்ளிவிழா ஆண்டில்
# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்

உளரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்கள் மற்றும் செயல் இயக்குநர் அவர்கள் ஆகியோரின் தொடர் அறிவுறுத்தலின் காரணமாகவும், கூடுதல் இயக்குநர்கள் மற்றும் பொதுமேலாளர் அவர்களின் வழிகாட்டுதலின் பயனாகவும் முற்றம்இதழ்1 லட்சம் பிரதிகள் வெளிவர உள்ளதுஎன்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

25வது வெள்ளிவிழா ஆண்டில் அடியெடுத்துவைக்கும் முற்றம் இதழ் 1 லட்சம் பிரதிகள் வெளிவர உதவிய அனைத்து மாவட்ட திட்ட இயக்குநர்கள், உதவித்திட்ட அலுவலர்கள் மற்றும் மாவட்ட அலுவலர்களுக்கு முற்றம் இதழ் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. தொடர்ந்து சந்தா பெற்று வழங்கிடக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இனிவரும் காலங்களில் முற்றம் இதழ் மாதத்தின் முதல் வாரத்தில் தங்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்படும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். தங்களின் மாவட்டத்தில் செயல்படும் சுய உதவிக்குழுக்களின் செயல்பாடுகள் குறித்த வெற்றிக்கதைகள், அரசு நிகழ்ச்சிகள் மற்றும் சுய உதவிக்குழுக்களின் படைப்புகளை உயர் தெளிவுத்திறன் (10 MBக்கு மேல் 300 pixels High Resolution) கொண்ட புகைப்படங்களுடன் இணைத்து wdcmutram@gmail.com என்ற இணையதள முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம்.








# கணினிப் பார்வை கோளாறு

கணினித் திரையைப் பல மணி நேரம் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? கண் சோர்வு, வறண்ட கண்கள், பார்ப்பதில் சிரமம், தலைவலி, மன அழுத்தம் போன்றவை ஏற்படும் ஆபத்து உள்ளது. கணினிப் பயன்பாட்டால் ஏற்படும் பார்வைக் கோளாறு, கணினிப் பார்வைக் கோளாறு (Computer Vision Syndrome) எனப்படுகிறது.

நம்முடைய கண்கள் மின்னணுக் கருவிகளைத் தொடர்ந்து பார்க்கும் வகையில் அமையவில்லை என்பதாலேயே, இதுபோன்ற சிக்கல்கள் ஏற்படுகின்றன. அதற்காக நவீனத் தொழில்நுட்பங்களைப் புறந்தள்ளிவிட்டுச் செயல்படும் காலகட்டத்திலும் நாம் வாழவில்லை. ஆனால், கண்கள் பாதிக்கப்படாமல் எப்படிக் காப்பாற்றிக்கொள்வது?

பொதுவாகக் கணினியில் வேலை செய்யும்போது, நம்மை அறியாமல் மணிக்கணக்கில் கணினித் திரையைப் பார்த்துக் கொண்டே இருக்கிறோம். இப்படிச் செய்வதால் சுருங்கி விரிய வேண்டிய கண் தசை இறுகிப் போகிறது.

கணினியில் வேலை செய்யும்போது 20 நிமிடங்களுக்கு ஒருமுறை கண் பார்வையைக் கணினியிலிருந்து விலக்கி 20 அடி தொலைவில் இருக்கும் ஏதேனும் ஒரு பொருளை 20 நொடிகளுக்குப் பார்க்க வேண்டும். இதன் மூலம் கணினியுடன் கட்டி போடப்பட்டிருந்த கண் தசைகளுக்குச் சிறிது நேரம் ஆசுவாசம் கிடைக்கும். சாதாரண மனிதர் ஒருவர் கண்களைச் சிமிட்டும் எண்ணிக்கையில், மூன்றில் ஒரு பங்குதான் கணினியில் வேலை பார்ப்பவர் சிமிட்டுகிறார் என்கின்றன இது தொடர்பான ஆய்வுகள். இதனால் கண்கள் வறண்டு போகின்றன.

இது மட்டுமில்லாமல், இன்று பெரும்பாலான அலுவலகங்கள் செயற்கையாகக் குளிரூட்டப்பட்ட ஏசி அறைகளில் இயங்குவதால் சுற்றுப்புறக் காற்றைக் காட்டிலும் ஏசி அறையிலிருக்கும் காற்று வறண்ட தன்மையுடன் இருக்கும். இதனாலும் கண்கள் வறண்டு போகும். இப்படி இருக்கையில், நீங்கள் கண்களை அடிக்கடி சிமிட்டுவது ரொம்பவும் அவசியம்.

அதிலும் 20 நிமிடத்துக்கு ஒரு முறை மெதுவாக 10 தடவை சிமிட்ட வேண்டும். இதனால் கண்களில் ஈரப்பதம் கூடும், கண் தசையின் அழுத்தம் குறையும். கண்கள் உலர்ந்து போவதாக உணர்ந்தால், ஒரு நாளில் இரண்டு முறை கண்கள் மீது தண்ணீரை அடித்துக் கழுவுவது நல்லது.

கணினியில் ஒரு மணி நேரம் தொடர்ந்து வேலை செய்த பிறகு ஒரு சிறிய இடைவேளை எடுத்துக் கொண்டு நிறைய தண்ணீர் குடிப்பது நல்லது. இதனால் சருமம், கண்களின் ஈரப்பதம் அதிகரிக்கும். நீங்கள் மூக்குக் கண்ணாடி அணிபவர் என்றால் ஒளியைப் பிரதிபலிக்காத லென்ஸைப் பயன்படுத்துங்கள். அதேபோல, காண்டாக்ட் லென்ஸை விடவும் மூக்குக் கண்ணாடி நல்லது. ஏனென்றால், கண்ணில் ஈரப்பதம் குறைந்து போனால் காண்டாக்ட் லென்ஸ் மேலும் பல அசவுகரியங்களை ஏற்படுத்தும்.

நாற்காலி அமைப்பும் மிகவும் முக்கியம். கணினி வைக்கப்பட்டிருக்கும் மேஜையும், நீங்கள் அமர்ந்து வேலை செய்யும் நாற்காலியும் சவுகரியத்துக்கு ஏற்றதுபோல் மாற்றிக்கொள்ளும் வகையில் இருப்பது நல்லது. கணினித் திரையின் மேல்புறம் உங்கள் பார்வை மட்டத்துடன் ஒத்துப்போக வேண்டும் அல்லது பார்வையிலிருந்து 10 முதல் 15 டிகிரி வரை கீழே இருத்தல் நல்லது. நீங்கள் அமர்ந்திருக்கும் இடத்திலிருந்து 20 முதல் 24 அங்குலம் தொலைவில் மானிட்டரை வைப்பதும் முக்கியம்.

வருடா வருடம் மருத்துவரிடம் கண்களைப் பரிசோதிப்பது அவசியம். ஒருவருக்கு நல்ல பார்வைத் திறன் இருந்தாலும், கணினியை நோக்கிப் பார்வையைக் குவிப்பதில் சிக்கல்கள் இருக்கலாம். அப்படி இருந்தால் கண் மருத்துவர்கள் சரியான கண்ணாடியைப் பரிந்துரைத்து கண்களைப் பாதுகாப்பார்கள்.

# வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வெற்றிக் கதைகள்

## வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் செயல்பாடுகளை உலக வங்கிக் குழுவினர் ஆய்வு செய்து பாராட்டினர்!

சென்னையில் உள்ள வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் (VKP) மாநில அளவிலான அலுவலகத்தில், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முன்னெடுப்பு சேவைகளைப் பெறுவதற்கும், முன்னேறி செல்வதற்கும் உலக வங்கி 6 மாதங்களுக்கு ஒரு முறை அதன் அனைத்து திட்டங்களின் முன்னெடுப்பு ஆதரவு பணியை (ISM) நடத்துகிறது. அதன் தொடர்ச்சியாக, உலக வங்கியின் 10 அலுவலர்களைக் கொண்ட அணியினரின் ஒன்பதாவது 'முன்னெடுப்பு ஆதரவு பணி (ISM)' நிகழ்ச்சி 2023 ஜனவரி 9ஆம் தேதி முதல் 12ஆம் தேதி வரை நடைபெற்றது.



இந்த 9 வது ISM பணிக்காக உலக வங்கி அணியினர் 3 அணிகளாகப் பிரிந்து திட்ட மாவட்டங்களான நாமக்கல், திருச்சி, திருவாரூர், மயிலாடுதுறை, கிருஷ்ணகிரி மற்றும் திருவண்ணாமலை ஆகிய 6 மாவட்டங்களைப் பார்வையிட்டு ஆய்வு நடத்தினர். இதில் தொழிற்குழுக்கள், உற்பத்தியாளர் குழுக்கள், உற்பத்தியாளர் நிறுவனங்கள், மகளிர் வாழ்வாதார சேவை மையங்கள், சமுதாயப் பண்ணைப் பள்ளிகள், சமுதாயத் திறன் பள்ளிகள் ஆகியவற்றை ஆய்வு செய்து திட்டப் பயனாளர்களிடம் கலந்துரையாடினர். அதன் பிறகு உலக வங்கி அணியினர் திட்டத்தின் முன்னெடுப்புகளைப் பாராட்டியதுடன், தேவையான பயனாளர்கள் உரிய பயன்களை அடைந்துள்ளனர் என்றனர். மேலும் வளமடைந்த பயனாளர்களின் நிறுவனங்களை உயர் வானப் பாதையிலும் நிலையான வகையிலும் மேம்படுத்த வேண்டும் என்றனர்.

ஆய்வில் கண்டறிந்த திட்ட வளர்ச்சிக்கானத் தேவைகள் குறித்து, அரசு கூடுதல் தலைமை செயலாளர் என்.முருகானந்தம், இ.ஆ.ப., மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு முதன்மை செயலாளர் திருமதி.பெ.அமுதா, இ.ஆ.ப., ஆகியோரிடம் உலக வங்கி அணியினர் விவரித்தனர். இந்நிகழ்ச்சியின் சிறப்பம்சமாக இதன் விவரங்களை, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் உலக வங்கி அணியினர் சமர்ப்பித்தனர். இந்த நிகழ்வின்போது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் / வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி.ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., கூடுதல் இயக்குநர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

9வது ISM செயல்பாடுகளை சிறப்பாக செயல்படுத்தியதற்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் அனைத்து அலுவலர்களுக்கும் உலக வங்கி அணியினர் பாராட்டு தெரிவித்தனர்.

வாழ்ந்து காட்டுவோம் திட்ட செயல்பாடுகளுக்காக உலக வங்கியும் தமிழ்நாடு அரசும் இணைந்து 70:30 என்ற அடிப்படையில் மொத்தமாக ரூ.910.37 கோடி (123.74 மில்லியன்) நிதியை வழங்கியுள்ளன. இந்த நிதியில் ஊரகப் பகுதி நிறுவனங்களின் மேம்பாடு மற்றும் பயனாளர்கள் திறனுயர்த்தப்பட்டு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. 2017ஆம் ஆண்டு தொடங்கிய இந்த 6 ஆண்டு திட்டமானது 2023 ஆம் ஆண்டு வரை செயல்படும்.

# புதுடெல்லியில் நடைபெற்ற இந்திய வாழ்வாதார உச்சி மாநாட்டில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மைச் செயல் அலுவலர் மகளிர் மேம்பாடு குறித்து உரையாற்றினார்!

இந்திய வாழ்வாதார உச்சி மாநாடு, 2023 ஜனவரி 20 அன்று புதுடெல்லியில் நடைபெற்றது. இதில் சுய உதவிக் குழுக்களின் மேம்பாட்டு மாறுதலுக்கான 'திறனுயர்ந்த தொழில் நிறுவன மேம்பாட்டு' அமர்வின்போது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் / வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள் பேசுகையில், 'ஊரகப் பகுதிகளிலுள்ள சுய உதவிக் குழுக்களின் வறுமையான நிறுவனங்களைக் கண்டறிந்து அவற்றின் நிலையை மாற்றி வளமாக்கியது குறித்தும், மகளிர் தொழில் முனைவோருக்கான முக்கியத்துவம் அளிக்கப்பட்டது' குறித்தும் எடுத்துரைத்தார்.



மேலும் மகளிர் தொழில் முனைவோருக்கு திறனுயர்வுப் பயிற்சியின் அவசியம், ஆர்வமுள்ள தொழில் முனைவோருக்கான நிர்வாக மேலாண்மை, நிறுவனங்களுக்கான நிதியுதவி, சந்தை வணிகம், தொழில் நிர்வாகம், தொழில் மேம்பாட்டு சேவைகள் மற்றும் பயனாளர் நிறுவனங்களின் நிலைத்தத் தன்மையை உருவாக்க பாதுகாத்து வழிநடத்துதல் போன்றவை குறித்தும் முதன்மை செயல் அலுவலர் அவர்கள் வலியுறுத்தினார்.

# கடலூர் மாவட்டம்
## தரமான மணிலா உற்பத்திக்கு, நிதியுதவியுடன் பண்ணைப் பயிற்சி!



கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டாரம், சின்ன குமட்டி ஊராட்சியில் செயல்பட்டு வரும் சின்னகுமட்டி மணிலா உற்பத்தியாளர் குழுவின் செயல்பாடுகள் குறித்து என். மகேஷ்வரி கூறுவதைக் கேட்போம் வாருங்கள், எங்கள் ஊரில் உற்பத்தி செய்த நிலக்கடலையை, இடைத்தரகர்கள் வழியாக மட்டுமே விற்பனை செய்து வந்தோம். இதன் மூலம் எங்களது நிலக்கடலையை குறைந்த விலைக்கே விற்க முடிந்தது.

எங்கள் ஊரில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் 'மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் (PGP)' நடத்தப்பட்டது. அதில் திட்ட அலுவலர்கள் 'உற்பத்தியாளர் குழு' தொடர்பான நன்மைகள் குறித்து விளக்கினர். திட்டத்தினரின் வழிகாட்டுதலின்படி 60 மகளிர் ஒருங்கிணைந்து குழுவைத் தொடங்கினோம்.

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திலிருந்து தொடக்க நிதியாக ரூ.75,000/- வழங்கினர். அந்த நிதியில் பயிருக்கு மருந்து தெளிப்பான்கள், பயிர் நடும் இயந்திரங்கள், படுதா, பவர் டில்லர் ஆகியவற்றை வாங்கினோம். நிலக்கடலை பயிரில் ஏற்படும் நோய்களை எதிர்கொள்ள விருத்தாச்சலம் K.V.K.வில் தரமாக பயிர் செய்யும் முறை, மண் ஆய்வு செய்வது, விதை நேர்த்தி செய்வது ஆகியவற்றை விரிவாக அறிந்து கொள்ள எனக்கு நேரடி பயிற்சி வழங்கப்பட்டது.

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் எங்கள் குழுவின் சமுதாயப் பண்ணைப் பள்ளிப் பயிற்சிக்காக ரூ. 70,000/- நிதியுதவி அளித்தனர். அந்த நிதியில் எங்கள் குழுவில் ஆர்வமுள்ள 30 பேரை தேர்வு செய்து அவர்களுக்கு நான் பயிற்சி கொடுத்தேன். இதில் மண்ணின் சத்துகளின் தன்மைக்கேற்ப உரம் போடுவது குறித்து சொல்லிக் கொடுத்தேன். வாரம் ஒரு முறை எல்லா ஸ்பார்க்குகளுக்கு விளக்கப் பயிற்சி கொடுத்து வருகின்றேன்.

நாங்கள் எல்லோருமே உற்பத்தியாளர் குழுவாக இணைந்ததால், பல்வேறு தொழில் நுட்பங்களை அறிந்து கொண்டு, தரமான வழியில் உற்பத்தியைப் பெருக்கி வருகிறோம். சொந்தமாக கருவிகள் வாங்கி, வாடகையை சேமிக்கிறோம்; கூட்டாக உற்பத்தி செய்வதால், இடைத்தரகர்கள் இன்றி, நிலக்கடலையை மொத்தமாக நல்ல விலைக்கு விற்பனை செய்யவுள்ளோம் என்று மகிழ்ச்சிப் பொங்க கூறினார்.

## ஈரோடு மாவட்டம்

# தொழிற்குழுவாக நல் மாற்றம் கண்டோம். மாவு மில் வழியாக முன்னேற்றம் கொண்டோம்

தொழிற்குழுவாக நல்மாற்றம் கண்டோம். மாவு மில் வழியாக முன்னேற்றம் கொண்டோம் என்று கூறும் சுமதி, வாய்ப்பாடி மாவு மில் தொழிற்குழுவின் வெற்றிக் கதையை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்.

ஈரோடு மாவட்டம், சென்னிமலை வட்டாரம், வாய்ப்பாடி ஊராட்சியில் நாங்கள் சுய உதவிக் குழுவை நடத்தி வந்தோம். எங்களில் சிலர் அவரவர்களுக்குத் தெரிந்த வேலைகளை செய்து வந்தோம். எங்களுக்கு நிலையான தொழில் வாய்ப்போ, வருமானமோ இல்லாமல் இருந்தோம். எங்கள் குடும்பத்திற்கு வேண்டிய மாவு வகைகளை நாங்கள் வெளியில் அரைத்து வருவோம். எங்களுக்கு ஒரு நிலையான தொழில் ஆதாரம் தேவைப்பட்டது, அதற்காக நாங்கள் காத்திருந்தோம்.

கடந்த ஆண்டு எங்கள் கிராமத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் ஒரு விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது. அந்தக் கூட்டத்தில் எங்கள் ஊரில் உள்ள தொழில் வாய்ப்புகள் மற்றும் தொழில் வாய்ப்புக்காக காத்திருக்கும் மகளிரான எங்களைக் கண்டறிந்தனர். எங்களை தொழிற்குழுவாக உருவாக்கி மாவு மில் நிறுவனம் உருவாக்க ஆலோசனை வழங்கினர். எங்களுக்கு மாவு அரைப்பதற்கான தொழிற்பயிற்சியை VKP திட்டத்தின் மூலம் வழங்கினர். அதன் பிறகு தொழில் தொடங்க ஆர்வமுள்ள 13 பேரும் இணைந்து வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வழிகாட்டலின்படி, 'வாய்ப்பாடி மாவு மில் தொழிற்குழுவை' நிறுவினோம். எங்கள் தொழிற்குழுவின் பெயரில் இந்தியன் வங்கியில் நடப்புக் கணக்கு ஒன்றைத் தொடங்கினோம்.

எங்கள் தொழிற்குழுவிற்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் தொடக்க நிதி ரூ.75,000/- வழங்கி எங்களை ஊக்குவித்தனர். அந்நிதியைக் கொண்டு, இரண்டு மாவரைக்கும் இயந்திரங்களை வாங்கி, மாவு அரைத்துக் கொடுக்கத் தொடங்கினோம். இதில் ஒரு இயந்திரத்தில் இட்லி மாவையும், இன்னொரு இயந்திரத்தில் கோதுமை மாவையும் அரைத்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

இப்போது எல்லா உறுப்பினர்களும் மாவு அரைத்தல், பாக்கெட் இடுதல், தொடர்பான வேலைகளை கற்றுக் கொண்டதால், எல்லோருக்கும் தொழில் வாய்ப்புகள் இருந்து கொண்டே இருக்கின்றன. மாவு அரைக்க இருவர், பாக்கெட் இட, பாக்கெட்டை சீலிங் செய்ய இருவர் என ஆளுக்கு ஆள் வேலைகளைப் பிரித்துக் கொண்டு செயல்பட்டு வருகிறோம்.

எங்கள் வாய்ப்பாடி ஊராட்சியில் மாவு அரைவை தொழிற்குழுவைத் தொடங்கிய பின்பு, எங்கள் கிராமம் மற்றும் அருகிலுள்ள கிராமங்களிலிருந்து வாடிக்கையாளர்கள் வந்து இட்லி மாவு, அரிசி மாவு, கோதுமை மாவு ஆகியவற்றை அரைத்துச் செல்கின்றனர். மேலும், பல்வேறு மாவு வகைகளை அரைத்து, பாக்கெட் இட்டு அருகிலுள்ள ஊர்களுக்கும் சுய உதவிக் குழுக்களுக்கும் விற்பனை செய்து கொண்டிருக்கிறோம். இதற்கு எங்கள் உறுப்பினர்கள் எல்லோரும் உறுதுணையாக உள்ளார்கள். அனைவரும் நல்ல வருமானம் ஈட்டி வருகின்றோம்.

நாங்கள் நிலையான தொழில் வாய்ப்பின்றி இருந்தோம், எங்களுக்கு VKP திட்டத்தின் மூலம் தொழிற் பயிற்சி வழங்கப்பட்டது, தொழிற்குழுவாக உருவாக்கப்பட்டோம், திட்டத்தின் மூலம் ரூ. 75,000/- தொடக்க நிதியைப் பெற்றோம், தற்பொழுது 'வாய்ப்பாடி மாவு மில் தொழிற்குழு' நிறுவனப் பெயரில் நிலையான தொழிலாக நடத்தி வருகின்றோம். எங்களுக்கான பொருளாதார வளத்தை நாங்களே திட்டமிடுகின்றோம். என்று வாய்ப்பாடி மாவு மில் தொழிற்குழுவினர் மகிழ்ச்சிப் பொங்க கூறினார்.



# சர்வதேச தாய்மொழி தினம்

உலக அளவில் பிப்ரவரி 21ஆம் தேதி சர்வதேச தாய்மொழிகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது, பன்மொழி கலாச்சாரத்தை அங்கீகரிக்கவும், ஊக்குவிக்கவும் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. பழமொழி பேசும் மக்கள் மூலமாக அவர்களது கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய அறிவு ஆகியவற்றை காக்கும் நோக்கத்திலும் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.

பிப்ரவரி 21ஆம் தேதியை உலக தாய்மொழி தினமாக அனுசரிப்பது குறித்து கடந்த 1999ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பில் நடைபெற்ற, பொது மாநாட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.அதை தொடர்ந்து, 2000ஆவது ஆண்டு முதல் சர்வதேச தாய்மொழி தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

இந்திய அரசு கடந்த 2011ஆம் ஆண்டில் நடத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் இந்தியாவில் பேச்சு வழக்கில் 121 மொழிகளும், 270 தாய்மொழிகளும் இருக்கின்றன என்பது தெரிய வந்தது. அகில இந்திய அளவில் ஒரு மொழியைப் பேசும் 10,000 மக்களை பிரித்து பார்ப்பதன் மூலமாக இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இந்தியாவில் உள்ள மொழிகள் இரண்டு வகைகளாக பிரிக்கப்படுகின்றன.முதலாவதாக அரசமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் உள்ள 22 அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் ஆகும்.இரண்டாவதாக எட்டாவதுஅட்டவணையில்சேர்க்கப்படாததாய்மொழிகள் ஆகும்.நாட்டில் மொத்தம் வரையறுக்கப்பட்ட பிரிவில் 123 மொழிகளும், வரையறை செய்யப்படாத பிரிவில் 147 தாய் மொழிகளும் இருக்கின்றன.

# தேசிய அறிவியல் தினம் (பிப்ரவரி 28)

ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 28-ம் தேதி தேசிய அறிவியல் நாள் கொண்டாடப்படுகிறது. சர் சி.வி.ராமனை பெருமைப்படுத்தும் வகையில் இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது. அவர் கண்டுபிடித்த ராமன் விளைவு கோட்பாட்டை உலகுக்கு அறிவித்த நாள் பிப்ரவரி 28. அதனால்தான் அன்றைக்கு தேசிய அறிவியல் தினமாக கொண்டாடப்படுகிறது.

தேசிய அறிவியல் தொழில்நுட்ப பரிமாற்றக் குழு 1986-ம் ஆண்டு இந்த தினத்தை அறிவித்தது. அறிவியலைப் பரப்புவதற்காக நாட்டில் சிறப்பாக செயல்படும் நிறுவனங்கள், தனி நபர்களுக்கு அறிவியல் பரப்புதலுக்கான தேசிய விருதும் இந்த நாளில் வழங்கப்பட்டு வருகிறது.

ஒருமுறை கொல்கத்தா பல்கலைக்கழகத்தின் பிரதிநிதியாக ஐரோப்பாவில் நடைபெற்ற விஞ்ஞானிகள் மாநாட்டுக்கு ராமன் கப்பல் பயணம் மேற்கொண்டார். அப்பொழுது இயற்கை மீதிருந்த ஆர்வம் காரணமாக வானத்தை உற்றுநோக்கிக் கொண்டிருந்தார். தான் பார்த்த மத்திய தரைக் கடல் பகுதியின் வானம் ஏன் அவ்வளவு நீல நிறமாக காட்சியளிக்கிறது என்று சிந்தித்தார். இந்தக் கேள்வி அவருடைய மனதில் ஆழப் பதிந்தது. இதற்காகப் பின்னாளில் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்.

அந்த ஆராய்ச்சியின் முடிவில் ஒளி ஊடுருவக் கூடிய ஊடகம் திடப் பொருளாகவோ, திரவப் பொருளாகவோ அல்லது வாயுப் பொருளாகவோ இருக்கலாம். அந்த ஊடகங்களில் ஒளி செல்லும்போது அதன் இயல்பில் ஏற்படும் மாறுதல்களுக்குக் காரணமாக 'ஒளியின் மூலக்கூறு சிதறல்' (Molecular Scattering Light) ஏற்படுகிறது என்ற உண்மையைக் கண்டறிந்தார். இந்த சிறப்பான ஆய்வுக்குத்தான் அவருக்கு நோபல் பரிசுக் கிடைத்தது.

அவர் தன்னுடைய ஆய்வின்போது வண்ணப்பட்டை நிழற்பதிவுக் கருவியை (Spectrograph) பயன்படுத்தினார். சூரிய ஒளியை பல்வேறு ஊடகங்களின் வழியே செலுத்துவதன் மூலம், நிறமானியில் சில புதிய 'வண்ண வரிகள்' தோன்றுவதை அவர் கண்டார். அவை 'ராமன் வரிகள்' என்றும், அவருடைய கண்டுபிடிப்பு 'ராமன் விளைவு' (Raman Effect) என்றும் பின்னாளில் அழைக்கப்படத் தொடங்கியது.

Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029. Published from (1,00,000 Copies Circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor : S. CHINNAPPAN.

# மதிப்புக் கூட்டி பொருள் உயர்ந்தது!
# உற்பத்தியாளர் நிறுவனம் தரம் வளர்ந்தது!

பல்வேறு எண்ணெய் வகைகளையும், பருப்பு மற்றும் உணவுப்பொருள் வகைகளையும் மதிப்புக் கூட்டி தரம் உயர்ந்து வருகின்றனர்.





**திருவாரூர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம்**
மன்னார்குடி வட்டாரம், திருவாரூர் மாவட்டம்.

- 175 ஊராட்சிகளின் 1300 உறுப்பினர்கள் செயல்படுகின்றனர்
- தரமான வேளாண் உற்பத்திப் பொருட்களை கொள்முதல் செய்து, தரம் உயர்த்தி வணிக அடையாளம் செய்து, மதிப்புக் கூட்டி விற்பனை செய்கின்றனர்
- எண்ணெய் வித்துக்கள் மற்றும் தானிய வகைகளை கொள்முதல் செய்து, எண்ணெய் வகைகளும், மாவு வகைகளும் உற்பத்திச் செய்யப்படுகின்றன.
- இந்நிறுவனத்திற்கு சிறப்பு மானிய நிதியுதவி பல்வேறு நிலைகளில் வழங்கப்பட்டுள்ளது | கொரோனா சிறப்பு நிதியுதவி ரூ. 10 இலட்சம் | தொடக்க நிதி ரூ. 10 இலட்சம் | பசுமை விருது நிதி ரூ.2.5 இலட்சம்
- ஆண்டுக்கு ரூ. 1 கோடி வரை வணிகம் செய்கின்றனர்


## வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
5வது தளம், திருவிக தொழிற்பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை- 600032, தமிழ்நாடு

(044) 434 43200 | tnrtpstate@gmail.com | www.tnrtp.org
VaazhndhuKaattuvom VaazhndhuKaattuvom tn_rtp

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2021-2023 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2021-2023
Date of Publication : 1st Week of the every month Posted between 8th – 14th February 2023 Posted at Patrika Channel, Egmore



# TNULM

TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION

*Empowering Lives*

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம்
நகர்ப்புற ஏழை எளிய மக்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் நகர்ப்புற வீடற்றோருக்காக பல்வேறு திட்டங்களை தீட்டி தமிழக அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருவது பெருமைக்குரியது.